# சமூக விஞ்ஞானம்

காலாண்டு ஆய்விதழ்

மலர் - 5 இதழ் - 20 ஜூன், ஜூலை, ஆகஸ்டு - 2008

## சமூகத்தை அறிதல்

## தமிழர் புலம் பெயர்வு

## சந்தை பொருளாதாரம்

## இந்திய நிலபிரபுத்துவம்

## கிராம்சிய பார்வையில் அடித்தளம் / மேற்கட்டுமானம்

## இஸ்லாமிய மறுமலர்ச்சி

☆ கார்த்திகேசு.சிவத்தம்பி ☆ சமீர்அமின் ☆ தி.சு.நடராசன்
☆ சையது ஃபரீதுஅல்டாஸ் ☆ ஏ.சிவசுப்பிரமணியரகுராம் ☆ ரகுராமராஜி

# சமூக விஞ்ஞானம்

காலாண்டு ஆய்விதழ்

ஜூன், ஜூலை, ஆகஸ்டு 2008

மலர் : 5 இதழ்: 20

நிர்வாக ஆசிரியர் : **தேவ. பேரின்பன்**

ஆசிரியர் குழு : **முனைவர் தி.சு. நடராசன்**
**பேராசிரியர் எஸ். தோதாத்ரி**
**ஆர். பார்த்தசாரதி**
**ஏ.எஸ். மணி**
**உலோ. செந்தமிழ்க்கோதை**
**ர. பூங்குன்றன்**

வெளியிடுபவர் : **A. சுப்பிரமணியன்,**
அறங்காவலர்,
தென்னக ஆய்வு மையம்

அச்சிடுபவர் : **G. துரைராஜ்**
**பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்,**
17 (ப.எண். 142)
ஜானி ஜான் கான் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

தனி இதழ் : ரூ. 30/-

ஆண்டு சந்தா : ரூ. 100/-

ஆயுள் சந்தா : ரூ. 1000/-

வெளிநாடு ஓராண்டு
சந்தா : $ 25

சந்தா தொகையைப் பணவிடை அல்லது கேட்பு வரைவோலை மூலம் அனுப்பலாம்.

கேட்பு வரைவோலை **'Samooga Vignanam'** என்ற பெயருக்கு எடுக்கவும்.

தொடர்புகளுக்கு : **சமூக விஞ்ஞானம்**
எண். 17 (ப. எண். 142)
ஜானி ஜான் கான் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
☎ : 28482441, 28482973

தென்னக ஆய்வு மைய நிறுவனர்:
**சி.எஸ். சுப்பிரமணியம்**

## இ த ழி ல் ...

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 1 |
| 2. | விஞ்ஞானப் பூர்வமாகச் சமூகத்தை நோக்கல் | 3 |
| 3. | தமிழர் புலம்பெயர்வு - ஒரு பர்மிய உதாரணத்துடன் | 6 |
| 4. | புலம்பெயர்ந்தோர் ஊடகவியல் - ஈழத்தமிழர்களை முன்வைத்து | 16 |
| 5. | சந்தைப் பொருளாதாரமும், நிதி மூலதன முதலாளித்துவமும் | 23 |
| 6. | கிராம்சிய பார்வையில் அடிப்படை, மேற்கட்டுமானம் | 31 |
| 7. | இஸ்லாமின் மறுமலர்ச்சியும் - ப்ராடஸ்டண்ட் இஸ்லாமும் | 38 |
| 8. | நெய்தல் திணை : நீலப்புரட்சியும் தமிழக கடல்புற மாறுதல்களும் | 46 |
| 9. | அறிவியல் வினவல் தளங்களின் பொருண்மைப் புலங்கள் (2) | 58 |
| 10. | இந்திய நிலப்பிரபுத்துவம் | 61 |

'அரசியல் - ராணுவ காரணங்களுக்கான புலம் பெயர்வு ஒரு தேசிய இனத்தின் இருப்புக்கும் - அதன் பண்பாட்டுக்கும் சிக்கலான பிரச்சினைகளை முன்வைக்கிறது. புலம் பெயர்ந்த பின்னும் பண்பாட்டு ரீதியாக அன்னியமாகி விடாமல் தமது சொந்த மண்ணின் மரபுவேர்களைப் பாதுகாத்துக் கொள்வதில் தகவல் தொடர்பு முக்கிய பாத்திரத்தை வகிக்கிறது, கால் நூற்றாண்டுக்கு மேலான ஈழத்தமிழர்களின் புலம் பெயர்வில் அவர்கள் தமது சொந்த போராட்டத்தின் மூலம் ஏற்படுத்திக் கொண்ட ஊடகவியல் ஒரு தேசிய இனத்தின் இருப்பை பலமாக பதியவைப்பதற்கான ஊடகவியலாக அமைகிறது'.

# புலம்பெயர்ந்தோர் ஊடகவியல் - ஈழத்தமிழர்களை முன்வைத்து

சிவசுப்ரமணியம் ரகுராம்

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் கணிப்பின்படி, ஏறத்தாழ எட்டு இலட்சம் மக்களைக் கொண்டதாக புலம்பெயர் ஈழத் தமிழ்ச் சமூகம் காணப்படுகின்றது. ஈழத் தமிழர்களின் நால்வரில் ஒருவர் இன்று புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்வதாக, தாயகம்-புலம்பெயர்வு விகிதநிலை உள்ளது.

இவ்வாறு புலம்பெயர்ந்தவர்களை விட, இலட்சக்கணக்கான மக்கள் தாயகத்தில் - தமது சொந்த வசிப்பிடங்களை, ஊர்களை விட்டு அரச படையினரால் துரத்தப்பட்டிருக்கிறார்கள்; உள்ளூரிலேயே இடம்பெயர்க்கப்பட்டிருக்கிறார்கள். பல வருடங்களாக அகதி முகாம்களிலும், நண்பர்கள் - உறவினர்கள் வீடுகளிலும், வாடகை இல்லங்களிலும் வாழும் இவர்களில் மிகக் கணிசமானோர் இன்னமும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப அனுமதி மறுக்கப் பட்டவர்களாக, தமது சொந்த மண்ணில் வாழ்வதற்கான அடிப்படை உரிமை கூட மறுக்கப்பட்டவர்களாக வேதனையின் விளிம்பில் வாழ்க்கை நடாத்துகின்றனர். இவர்களது வீடுகளும், ஊர்களும் - இராணுவ முகாம்களாகவும், படைத்தளங்களாகவும், அதிவுயர் பாதுகாப்பு வலயங்களாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன என்பது மட்டுமன்றி, பல்வேறிடங்கள் - அரசு ஆதரவுடனான, சிங்களக்குடியேற்றங்களாகவும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இந்த இடம்பெயர்வு வாழ்வின் ஒரு நீட்சியாக, தமது மண்ணிலேயே பாதுகாப்பான வாழ்வு கிடைக்கப்பெறாத, நேரடியாகவும் மறைமுகமாகவும் ராணுவ வன்முறைகளுக்காளான, அரசியல் பழிவாங்கல்களுக்குட்பட்ட பெருமளவிலானோர் - தாயகத்தை விட்டே புலம்பெயர ஆரம்பித்தனர். 1980 களின் ஆரம்பத்திலும், பின்னர் நடுப்பகுதியிலுமாகத் தீவிரமான இந்தப் புலம்பெயர்வு - இன்றுவரை நீடிக்கவே செய்கிறது.

இவ்வாறு புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களை மூன்று அடிப்படைகளில் நோக்கலாம் என்கின்றார் தனஞ்சயன் ஸ்ரீஸ்கந்தராஜா.[1]

முதல் வகையில் வருபவர்கள் - 1983 களுக்கு முன்னரே, கல்வித் தேவைகளுக்காகவும் பணிகள் நிமித்தமும் நாட்டை விட்டுச் சென்றவர்கள். இவர்கள் பின்னர் நாட்டில் எழுந்த குழப்பநிலை கருதி, தாம் தற்காலிகமாக வசித்த நாடுகளிலேயே நிரந்தர வதிவுரிமை பெறத் தஞ்சம் கோரினர். இவர்களில் பெரும்பாலோர் ஐரோப்பாவையும், வட அமெரிக்காவையும் மையங் கொண்டிருந்தனர்.

இரண்டாவது வகையினர் - இலங்கைத் தீவில் படிப்படியாக அதிகரித்து வந்த இன ஒடுக்குமுறைகளுக்கு அஞ்சியும்,

அரசினதும் பெரும்பான்மை சிங்களவர் களதும் போக்குகளில் அதிருப்தியுற்றும் நாட்டை விட்டு விலகிச் சென்ற தொழில் சார் தகைமையாளர்களும், மத்திய வர்க்கத் தினரும், இவர்களுடன் நைஜீரியா, தான் சானியா, பப்புவா நியூ கயானா போன்ற நாடுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணி யாற்றச் சென்றிருந்த தொழில்சார் தகைமை யாளர்களும் மேற்கு நோக்கி நகர்ந்து சென்று இணைந்து கொண்டனர்.

மூன்றாவதும் முக்கியமானதுமான பிரிவினர் - 1983களில் தீவிரம் கொண்ட இனவன்முறைகளோடு பெருமெடுப்பில், அலை அலையாகப் புலம்பெயர ஆரம் பித்த ஈழத்தமிழர்கள். தமது சொந்த பந்தங் களைப் பிரிந்து மாதக்கணக்கில், ஆண்டுக் கணக்கில் - கிடைத்த வழிகள் யாவற்றிலு மாக உழன்றும், வார்த்தைகளில் சொல்ல முடியாத துயரங்களைச் சுமந்தும் தப்பி யோடி, அத்துயரப் பயணங்களின் நடுவே உயிர் இழந்தும், பல்வேறு நாடுகளின் கொடுஞ்சிறைகளில் வாடியும் வதைபட்டும் புலம்பெயர்ந்த பிரிவினர் இவர்கள். இந்தப் புலம்பெயர்வே ஈழத்தமிழ் இனத்தின் மீதான அரசு வன்முறைகளின் தீவிரத்தை உலகிற்கு உணர்த்த ஆரம்பித்ததுடன், உலகின் கவனமும் ஈழத்தமிழர்பால் ஈர்க்கப் படலானது.

## புலம்பெயர் வாழ்வில் சமூக ஒருங்கமைவு

புலம்பெயர்ந்தோர் மிக ஆரம்பத்தில் தனியனாக, தாம் புகுந்த நாடுகளில் வாழ ஆரம்பித்தாலும் - நாட்கள் செல்லச்செல்ல, ஈழத்தமிழர் சமூகம் சார்ந்து கொத்தணிகளாக (Clusters) வாழ ஆரம்பித்தனர். இந்த நிலை புலம்பெயர்ந்த தமிழர்களிடையே சமூக ஒருங்கமைவுக்குத் தோற்றுவாயாக அமைந் தது. தனியாட்களாக வந்தவர்கள் குடும்பங் களை உருவாக்கத் தலைப்பட்டனர். புலம் பெயர்ந்தவர்களில் ஆரம்பத்தில் ஆண் களே மிகப் பெருவாரியாகக் காணப்பட்ட தால், அவர்களுக்கான வாழ்க்கைத் துணை கள் தேடப்பட்டவிடத்து, தாயகத்திலிருந்து திருமணத்துக்காக இளம்பெண்களை அழைத்துக் கொள்வது பெருமரபாகத் தொடங்கியது. மேலும் இரத்த சொந்தங்கள், உறவினர்கள், நண்பர்களும் தாயகத்தி லிருந்து அழைத்துக் கொள்ளப்பட ஆரம் பித்தனர். உண்மையில் - இப்புலம்பெயர்வு வரிசை, 'மானுட நகர்வு' ரீதியில் ஆழமாக ஆராயப்பட வேண்டியதாகும்.

இது நிற்க - புலம்பெயர்ந்தவர்கள் மத்தியில் உருவான சமூக ஒருங்கமைவின் வழியே, சமூக-பொருளாதாரத் தேவை களின் அடிப்படையில், பல்வேறு அமைப் புக்களும் நிறுவனங்களும் தோற்றம் பெற லாயின. தமிழ்மொழிப் பாடசாலைகள், இசை-நடனப் பள்ளிகள், மாணவர் அமைப் புகள், விளையாட்டுக் குழுக்கள், நாடக மன்றங்கள், சமய நிறுவனங்கள், கோயில்கள், பழைய மாணவர் சங்கங்கள், வர்த்தக கூட்டு முயற்சிகள் ஆகியவற்றுடன் - சமூக ரீதியான தொடர் பாடலுக்காக ஊடகங்களும் ஆரம் பிக்கப்பட்டன. பத்திரிகைகளில் ஆரம் பித்து - வானொலி, தொலைக்காட்சி சேவைகளுமாகப் புலம்பெயர் தமிழர்களின் வெகுசன ஊடகச் செயற்பாடுகள் விரி வடைந்தன.

இலங்கைத் தீவில் வசிக்கும்போது அங்குள்ள சமூக அமைப்பிலிருந்தும் - பின், புலம்பெயர்வில் தனியன்களாகவும் - மீண்டும், வாழ்வு ஓரளவு நிலைப்பட மீண்டும் சமூக அமைப்பிற்குமாக இந்த ஒட்டுமொத்த முயற்சிகளும் தொடரவே செய்தன.

இவற்றின் தொடர்ச்சியாகவே அத்தகைய முயற்சிகளே, புலம்பெயர்ந்த ஈழத்தமிழ் மக்களை, அவர்களுக்கான அரசியல் அடையாளத்தை நோக்கியும் உந்தித் தள்ள ஆரம்பித்தன.

## அரசியல் அடையாளமும், அடையாள அரசியலும்

இலங்கை அரசாங்கத்தின் மீதும், பெரும்பான்மை சிங்களவர்களுடனான சக வாழ்வின் மீதும் எழுந்த நம்பிக்கையின்மை யின் பேரில், தங்களுக்கான தனித்த அரசியல் அடையாளத்தைத் தேட ஈழத்தமிழர் கள் தீவிரமாயினர். இதற்கு ஏற்கனவே

தாயகத்தில் உருவாகியிருந்த - சுதந்திரமும், தனித்த ஆட்சியதிகாரமும் நோக்கிய தனி நாட்டுக்கான அடையாளமும், அதன் முனைப்புப் பெற்ற சாதீய, மத, பிரதேச வேறுபாடுகள் கடந்த தமிழ்த் தேசிய அடையாளமும் - புலம்பெயர் ஈழத்தமிழரின் அரசியல் அடையாளமாகும் வாய்ப்புப் பெற்றது.

அதிலும் குறிப்பாகச் சொந்த நாட்டிலிருக்கும் தம் உறவுகளுடன் புலம் பெயர்ந்த தமிழர்கள் கொண்டுள்ள நெருக்கம், தாயக அரசியலை அவர்களிடம் எதிரொலித்தது.

ஆனாலும் - புலம்பெயர் தமிழர்களில் குறித்த பகுதியினர், இந்த அரசியல் அடையாளத்தைத் தமக்கும் சூடிக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை என்பது இங்கு குறிப்பிட வேண்டியதாகின்றது.

விடுதலைப் புலிகள் தலைமையேற்கக் கூடிய அரசியல் அடையாளம் - அவர்களுடன் முரண்பட்ட, மாற்றுக் கொள்கைகளை கொண்டு இயங்கியோருக்கும் / இயங்கி வருவோருக்கும் உவப்பானதாக இருக்கவில்லை. இவர்கள், மொத்தப் புலம்பெயர் சமூகத்தில் மிகச் சிறிய வீதத்தினராயினும் - இந்த எதிர்ப்பு நிலை, ஆய்வு நோக்கில் பதிவு செய்யப்பட வேண்டியதே.

இனி மீண்டும் அடையாள அரசியலுக்கு வருவோமாயின், புலம்பெயர் தமிழர்கள் மேற்கொண்ட முயற்சிகள், உண்மையில் தாயகத்திலிருந்து புவியியல் ரீதியாக மிகத் தொலைவான தூரங்களில் தமிழ்த் தேசியம் சார்ந்த 'புலம்பெயர் தேசியம்' ஒன்றை ஒப்பீட்டு ரீதியில் சாத்தியமாக்கியுள்ளன என்றே கூறலாம்.

இந்த அரசியல் அடையாளம் - ஈழத் தமிழ் மக்களால் பெருமளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிலையில், இத்தனித்த அடையாளம், 'இலங்கையர்' என்ற பொது அடையாளத்துடன் எவ்வாறு முரண்படுகின்றது என்பதும் கவனிக்கப்பட வேண்டும். இதனையே Maxwell Keegal, "An assessment of the role of the Sri Lankan Diaspora" என்னும் கட்டுரையில் - புலம் பெயர்ந்தவர்கள் 'இலங்கைச் சமூகம்' எனக் கூறக்கூடிய நிலையில் இல்லை எனவும், இலங்கைத் தீவில் சிங்கள - தமிழ் இனங்களுக்கிடையே காணப்படும் இன, மத, கருத்தியல் வேறுபாடுகள் - புலம்பெயர் நாடுகளுக்கும் ஏற்றுமதியாக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடுகின்றார்.[2]

மேலும் - இலங்கையிலிருந்து சிங்களவர்களும் சிறிய தொகைகளிலாயினும் வேறுவேறு நாடுகளில் வாழ்ந்து வந்தாலும் - அவர்களையும் தமிழர்களையும் ஒரு சேர, வெளிநாட்டவர்கள் நோக்கவில்லை எனவும்- 'இலங்கைச் சிங்களவர்', 'இலங்கைத் தமிழர்' என்ற வேறுபாடும், இந்த இரு இனங்களும் ஒன்றுக்கொன்று பாரம்பரியமான எதிர்த்தன்மைகளை (Traditional Antagonists) உடையவை என்பதும் வெளிநாட்டவர்களால் புரிந்து கொள்ளப்பட்டிருப்பதாகவும் Maxwell Keegal மேலும் கூறுகிறார்.[3]

யதார்த்தத்தில் - 1983களுக்கு முன்பு இலங்கைத் தீவிலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள், தம்முடன் சம காலகட்டங்களில் வெளிநாடுகளில் வசித்த சிங்களவர்களுடன் கொண்டிருந்த தொடர்புகள் (Communication) பின்னர் - 1983களுக்கு அப்பால், இன வன்முறைகளின் நேரடிச் சாட்சியங்களாக வந்த புலம்பெயர் தமிழர்களால் தொடரப்பட முடியாமல் போனதும் கண்கூடே.

இதேவேளை - புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் தாம் வாழும் நாடுகளில் நிரந்தரக் குடியுரிமை பெற்று, அந்தந்த நாட்டுக்குரியவர்களாக - உதாரணமாக கனேடியத் தமிழர், அவுஸ்திரேலியத் தமிழர், சுவிஸ் தமிழர், நோர்வேத் தமிழர் என்று அடையாளங் காணத் தலைப்பட்டிருப்பதாகவும் ஒரு கருத்து முன்வைக்கப்படுகிறது. ஒரு சில வரையறைகளுடன் இக்கருத்து கவனத்தில் கொள்ளப்பட்டாலும், இதன் வழியே - அந்தந்த நாடுகளின் உள்ளூர் அரசியலிலும் நிரந்தரக் குடியுரிமை பெற்றவர்கள் ஈடுபாடு காட்டும் நிலை உருவாகியிருப்பினும் - தாயகம் சார்ந்த பிணைப்புடன் கூடிய அரசியல் அடையாளத்தைக் கட்டறுக்கும் அல்லது அதிலிருந்து விலகிச் சென்றுவிடும் முயற்சிகள் இவர்கள் மத்தியில்

இடம்பெற்றுள்ளனவா? இடம்பெறுகின்றனவா? என்பது சந்தேகத்திற்குரியதே.

மாறாக - இவ்வாறு வேறு நாடுகளில் நிரந்தரக் குடியுரிமை பெற்ற புலம்பெயர்ந்த தமிழர்கள் பலர், தாயகத்துடன் தமது பிணைப்பை வலுப்படுத்திக் கொள்ளும் முயற்சிகளில், தமது சேவையை, பங்களிப்பை, தாயகத்திலும் தொடரச் செய்வதற்கு அவர்கள் காட்டும் ஆர்வமும் செயற்பாடுகளும் இங்கு விதந்துரைக்கப்பட வேண்டியனவே. குறிப்பாகத் தாயகத்தை மையப்படுத்திய கல்வி, சுகாதாரம், மீள் குடியேற்றம் ஆகிய துறைகளில் புலம் பெயர்ந்தோர் காட்டும் அக்கறை குறிப்பிடத் தக்கது. இதைவிட - தீவிர தாயக அரசியலில், மிகச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டுமெனில் இலங்கை அரசாங்கத்துடனான சமாதானப் பேச்சுக்களில், விடுதலைப் புலிகள் சார்பில் முன்வைக்கப்பட்ட இடைக் கால நிர்வாக சபைக்கான திட்ட ஆவணத் தயாரிப்பில், புலம்பெயர் தமிழர்களான இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி, அவுஸ்திரேலிய பல்கலைக் கழக சட்டப் பேராசிரியர் இமானுவேல் பிள்ளை, சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழக சட்டப் பேராசிரியர் சொர்ணராஜா உட்படப் பலர் பங்காற்றியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

## புலம்பெயர் தமிழர்களின் ஊடகச் செயற்பாடுகள்

தமிழ்த் தேசிய அடையாளத்தை இத்தகைய சூழலில் உறுதியுடன் பரவுறச் செய்வதற்குப் புலம்பெயர் தமிழர்களின் ஊடகப் பணிகள் பெருந்துணை புரியவே செய்தன.

தாயகச் செய்திகளைப் புலம்பெயர் சமூகத்திற்கு அறிவித்தல், இராணுவ-அரசியல் போக்குகளை உணர்வித்தல், அவற்றினடிப்படையில் புலம்பெயர் தளத்தில் அரசியல் - சமூக - பொருளாதார கூட்டு முயற்சிகளுக்கு வித்திடுதல் உள்ளடங்கலாக - புலம்பெயர் பகுதிகளிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளும், வானொலிகளும், தொலைக்காட்சிகளும் - புவியியல் பரப்புகள் கடந்து - தாயகத்தை, புலம்பெயர் சமூகத்திற்கு அணுக்கமாக்கின, நெருக்கமாக்கின என்றே கூறலாம். இந்த ஊடகங்கள் தமிழ்த் தேசிய அடையாள அரசியலில் வெவ்வேறு படிநிலைகளில் இயங்கினாலும், அவற்றின் ஒட்டுமொத்தச் செயற்பாடுகள், தாயகத்தையும், தாயக அரசியலையும் பிரதிபலிப்பதிலிருந்து விலகிச் சென்றுவிடவில்லை என்பதையும் இங்கு கூர்ந்து கவனிக்க வேண்டும்.

பத்திரிகைகளைப் பொறுத்தளவில், தாயக அணுக்கத்தைத் தம் வாசகர்களுக்குத் தெரிவிப்பதற்குத் தாயகத்திலிருந்து வெளிவந்த / வெளிவருகின்ற நாளிதழ்களின் பெயர்களையே தமது வெளியீடுகளுக்கும் சூடிக் கொண்டதை இங்கு அவதானிக்கலாம். உதயன், ஈழநாடு (பாரிஸ்), ஈழமுரசு ஆகிய புலம்பெயர் தமிழர்களின் நாளிதழ்கள் இத்தகையனவே.

வானொலி / தொலைக்காட்சிச் சேவைகளைப் பொறுத்தளவில் - வானொலிச் சேவைகள் ஒப்பீட்டளவில் தொலைக்காட்சி சேவைகளை விட, அடையாள அரசியலில் கூடுதல் பங்களிப்புச் செய்வதைக் காண முடிகின்றது.

வானொலிச் சேவைகளைப் பொறுத்தளவில் - இலங்கைத் தலைநகர் கொழும்பிலிருந்து Asian Broadcasting Corporation வழங்கும் சூரியன் எஃப் எம், மகாராஜா நிறுவனத்தின் சக்தி எஃப் எம், சென்னையிலிருந்து சன் குழுமத்தின் சூரியன் எஃப் எம் தவிர - வேறு நேரடி வானொலிச் சேவைகள் குறைவான சூழலில், புலம்பெயர் வானொலி சேவைகள் ஒப்பீட்டளவிலேனும், தமக்கான தனிப்பாதைகளை வகுத்துக் கொண்டுள்ளன எனலாம். இந்த வியாக்கியானத்திற்கு ஐ.பி.ஸி., கனேடியத் தமிழ் வானொலி, அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இன்பத் தமிழ் ஒலி போன்ற புலம்பெயர்ந்தோரின் வானொலிச் சேவைகள் வாய்ப்பாக இருந்தாலும் - இந்த ஒப்புநோக்கு விரிவாக ஆராயப்பட வேண்டிய தேவையைக் கொண்டிருப்பதை, ஆய்வாளன் தரப்பிலிருந்து ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

### இணையம் வழியான கட்டற்ற கருத்துரிமை

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் அரசியல் அடையாளப்படுத்தலில் அவர்களுக்கு மிகப் பெரும் வடிகாலைத் தந்திருப்பது சைபர் வெளி (Cyber space) எனப்படும் இணையவழித் தொடர்புகளே.

சர்வதேச தொடர்பு ஊடகங்களில் - ஈழத் தமிழர்களின் பிரச்சினை பற்றியோ, தாயகத்தில் கட்டவிழ்த்து விடப்படும் இன வன்முறைகள் பற்றியோ கவன ஈர்ப்புக் காட்டப்படாதவிடத்து, இணையம் எனப் படும் புதிய ஊடகம் தந்திருக்கின்ற வாய்ப்பு, தமிழர்கள் தமக்குள்ளும் சரி, உலகப் பரப்பினோடும் சரி, தொடர்பினை வளர்த்துக் கொள்வதற்கு மிகப் பெரும் துணையாக உருவாகியுள்ளது.

தமிழில் மட்டுமல்லாது ஆங்கிலத்திலும் டொச், பிரெஞ், இத்தாலியன், நோர் வீஜியன் என ஏனைய உலக மொழிகள் பலவற்றிலும் திறக்கப்பட்டுள்ள இணைய தளங்கள் - ஈழத் தமிழ் மக்கள் தமது விடுதலைப் போராட்டத்தின் நியாயப் பாட்டைச் சொல்வதற்கு மாத்திரமல்லாது, அன்றாடம் தாயகத்திலும் இன்னபிற இடங் களிலும் நடைபெறும் நிகழ்வுகளை மற்ற வர்களுக்கு அறியவைப்பதிலும், ஒருங் கிணைந்த நடவடிக்கைகளுக்கான தளங் களைத் தருவதிலும் பெரும் பங்காற்று கின்றன.

இவற்றைப் பொதுவில் செய்திகளுக் கான, செய்தி ஆய்வுகளுக்கான இணையத் தளங்கள் எனவும், ஏனைய படைப்பாக் கங்கள் துறைகளுக்கான தளங்கள் எனவும் வகை பிரிக்கலாம்.

செய்திகள், செய்தி ஆய்வுகளுக்கான தளங்கள் எனும்போது - புதினம், சங்கதி, பதிவு, ஈழம் செய்திகள், நிதர்சனம், தமிழ் நாதம் எனத் தமிழிலும், தமிழ்நெட், தமிழ்க் கனேடியன், தமிழ் கார்டியன், ஈழம் வெப், தமிழ் நேஷன், தமிழ் ஹோம்லன்ட், தமி ழீழம் நியூஸ் என ஆங்கிலத்திலும் வெளி யாகும் இணையத்தளங்கள் உதாரணத்திற் குரியவை.

தனியே இணையத்தில் மட்டுமே - செய்திகள், செய்தி ஆய்வுகளை வெளி யிடும் இவற்றுடன், தாயகத்திலிருந்து வெளி வரும் நாளிதழ்களும் - புலம் பெயர்ந்த மக்களையும் தம் தினசரிச் செய்திகள் சென்றடையும் வண்ணம், இணையப் பதிப்புகளையும் (Internet Editions) வெளியிட்டு வருகின்றன.

இந்த வகையில் - யாழ்ப்பாணத்தி லிருந்து வெளிவரும் உதயன், வன்னியி லிருந்து வெளிவரும் ஈழநாதம் ஆகியவற் றுடன், கொழும்பிலிருந்து வெளிவரும் வீரகேசரி, தினக்குரல், சுடரொளி போன்றன வும் இணையப் பதிப்புகளை நடத்தி வரு கின்றன. புலம்பெயர் தமிழர்கள் மத்தியி லிருந்து வெளிவரும் 'ஈழமுரசு' போன்ற பத்திரிகைகள் சிலவும், தம் இணையப் பதிப்புக்களை வெளியிட்டு வருகின்றன.

இந்த இணையத் தளங்களுடன் இணைய வானொலி, தொலைக்காட்சி ஒலி/ஒளிபரப்புக்கள் வழியாகவும் - புலம் பெயர் தமிழர்கள் தமது குரலை ஒலிக்கச் செய்கின்றனர்.

இணைய வானொலிகள் வரிசை யில் - லண்டன் பி.பி.சி. தமிழ், கனேடியத் தமிழ் வானொலி, ஐரோப்பியத் தமிழ் வானொலி, கனேடியத் தமிழோசை, சர்வ தேச தமிழ் வானொலி, உலகத் தமிழ் வானொலி - கனடா, அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இன்பத் தமிழ் ஒலி - அவுஸ்திரேலியா, தமிழ் அலை - பிரான்ஸ், சிங்கப்பூர் ஒலி, ஜேர்மன் தமிழ் வானொலி, மொன்றியல் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் ஆகியனவும், இணையத் தொலைக்காட்சிகள் வரிசையில் - ரிவிஜ இணைய ஒளிபரப்பு, தரிசனம், தமிழ் வண், சிகரம் என்பவற்றுடன் தமிழீழ தேசியத் தொலைக்காட்சியின் (NTT) இணைய ஒளி பரப்பும் இடம்பெறுகின்றன.

இவை தவிர - இன்னொரு பகுதியாக, படைப்பாக்கங்கள், வேறு துறைகளுக்கான இணையத் தளங்களின் வரிசையும் மிகப் பரந்ததாகவே உள்ளது. அவற்றில் - ஈழத் தில் தாம் வாழ்ந்த ஊர்களின் நினைவாக - வல்வை வரலாறு, மன்னார், ஊரெழு,

குப்பிளான் உட்படப் பல ஊர்களின் பெயர் களிலே இணையத் தளங்கள் காணப்படு கின்றன.

புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் அமைக்கப்பட்ட ஆலயங்கள் வழியேயும் - மெல்போர்ன் சிவா விஷ்ணு ஆலயம், கனடா வரசித்தி விநாயகர் ஆலயம், சிட்னி முருகன் ஆலயம் உட்பட பலவற்றுக்குத் தனியாக இணையத்தளங்கள் சைபர் வெளி யில் உலா வருகின்றன.

தமிழ் அமைப்புக்கள், நிறுவனங் களின் பேரில் - தமிழீழ தகவல் தொழில் நுட்பக் கல்லூரி, தமிழர் புனர்வாழ்வுக் கழகம், வெண்புறா, தமிழர் மனித உரிமை கள் மையம், ஈழத்தமிழர் கழகம், டென்மார்க் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, மொன்றியல் உலகத் தமிழர் அமைப்பு, அமெரிக்க உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, சுவிஸ் தமிழ மாணவர் அமைப்பு உட்படப் பல்வேறு அமைப்புக்கள் தமக்கெனத் தனித்தனியே இணையத் தளங்களைக் கொண்டுள்ளன.

இவை தவிர - தாயகத்தின் இயற்கை வனப்பை மாத்திரமல்லாது, போரின் கொடூரத்தையும், மக்களின் அவலத்தையும், அந்த அவலங்கள் மத்தியிலும் நகரும் அவர்தம் வாழ்வையும் காட்டும் நிழற்படப் பதிவுகளுக்காக - ஈழவிஷன், அருச்சுனா, யாழ்-2006 காட்சிகள், இரணைமடு, சுரேனின் படத்தொகுப்பு, அமரதாசின் படத் தொகுப்பு போன்ற இணையத் தளங்களும் சைபர் வெளியில் உலா வருகின்றன.[6]

இவற்றுடன் - வலைப்பூக்கள் எனச் சொல்லப்படும் Web blogs, தனிப்பட்ட நபர்களின் படைப்பாற்றலையும் கருத்துக் களையும் வெளியிடும் வாய்ப்புக்களைச் சுமந்து, இணையவெளியில் விரவிக் காணப் படுகின்றன.

ஒட்டுமொத்தமாக, இந்த இணைய தளங்களின் எண்ணிக்கையினையும் பயன் பாட்டினையும் நோக்கும்போது, உலகந் தழுவிய இணையப் பயன்பாட்டில் புலம் பெயர்ந்த தமிழர்களின் பங்களிப்பு என்பது அசாதாரணமானதொன்று என்றே கூற முடியும்.

அதிலும் - இணையத்தின் அதி உச்ச மான பயன்பாட்டு விளைவுகளைத் தமக்கும் ஆக்கிக் கொள்ளவும், இணையத்தின் படி நிலை வளர்ச்சிகளை உன்னிப்பாக அவ தானித்து, அதனைத் தமக்கேற்றவாறு கையகப்படுத்திக் கொள்ளவும் புலம் பெயர்ந்த தமிழர்கள் காட்டும் அக்கறை அளப்பரியதொன்று.

இணையம் தந்திருக்கின்ற - தொடர் பாடலுக்கான இலகு அணுகுமுறை, குறைந்த பொருள் செலவீனம், தனிப்படக் கட்டுப் படுத்தும் ஆற்றல், உண்மை நேரத் துடனான (Real time) வெளியீட்டு வேகம், முடிவிலி வரையிலான பரப்பும் தன்மை, துரிதமான மின்னூட்டச் சேகரிப்பு, தரவுகளை சிரமமின்றி உடனுக்குடன் இணைத் துக் கொள்ளும் அல்லது விலக்கிக் கொள்ளும் நெகிழ்வு போன்ற இன்னோரன்ன பெறுதிகள் - புலம்பெயர் தமிழ்ச் சமூகத் தினால் சரியான வகையில் பயன்பாட் டுக்குள்ளாகின்றன.'

இணையத்தைப் பயன்படுத்தும் புலம் பெயர் தமிழ்ச் சமூகத்தின் நோக்கம் தனிப் படவும், சமூகம் சார்ந்தும் இருந்தாலும் - ஆய்வுத் தலைப்புக் கருதி, சமூகம் சார்ந்த அரசியல் அடையாளத்துக்கான முயற்சி களில் ஒன்றிய இணையப் பயன்பாட்டை இங்கு நோக்கலாம்.

ஒழுங்குமுறையாக இணையத்தளங் கள் பராமரிக்கப்படுவதும் (Methodically maintained sites) வினைத்திறனுடன் கூடிய தொழில்சார் தகைமை பேணப்படு வதும் (High level of Professionalism) அர்ப்பணிப்புள்ள பணியாட்களுமாக இந்த இணையத்தளங்கள் இயக்கப்படுவது - இலங்கை அரசாங்கத்துக்குப் பெருத்த சவாலைத் தந்துள்ளது.

இணையம் வழியே - உண்மைகள் உலகின் கண்முன் எடுத்துரைக்கப்படு வதை, 'ஒரு பயங்கரமான நடவடிக்கை' என உருவகப்படுத்துவதில் ஐ.நா. சபை வரை இலங்கை அரசாங்கம் முயன்றிருக்கிறது. உலகளாவிய தகவல் பரிமாற்றப் பாதையை (Global Information Super High Way) பயன்படுத்திப் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்

தமிழர்கள் போராளிகளுக்கு ஆதரவான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும், இது இலங்கை போன்ற நாடுகளின் இறை யாண்மையை கேள்விக்குள்ளாக்குவதாக வும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை அரசு, ஐ.நா. சபையில் தன் பிரதிநிதி மூலம் நேரடியாகவே எதிர்ப்பைத் தெரிவித்தது.[8]

இது, இணையம் வழியே தமிழர்கள் தம் குரலை ஓங்கி ஒலிப்பதையும், அவர் களது கருத்துச் சுதந்திரம் கட்டுப்படுத்தப் படாதிருப்பதையும், இயலாத் தன்மை யோடு இலங்கை அரசாங்கம் ஒப்புக்கொள் வதையே சுட்டிக்காட்டுகிறது.

இணையத்தில் தமிழர் வெளிப்பாடு களை ஒடுக்குகின்ற இன்னொரு முயற்சி யாகக் கடந்த சில மாதங்களுக்கு முன்னர், தமிழர் பகுதி நிலவரங்களை உடனுக்குடன் ஆங்கிலத்திலும், டொச் மொழியிலும் வெளியிட்டு வரும் தமிழ் நெற இணைய தளத்தை இலங்கையில் தடை செய்தது அரசாங்கம். இந்த நடவடிக்கைக்குப் பல்வேறு தரப்புக்களும் கண்டனம் தெரிவித்தும், அரசாங்கம் தன் நிலையை மாற்றவில்லை. ஆனால், தன் மீதான தடையைத் தமிழ் நெற் இணையத்தளம் மிகச் சாதுரியமாகக் கையாண்டது. தமிழ் நெற்றில் வெளிவரக் கூடிய செய்திகள் யாவும் வேறு இணையத் தளங்கள் சிலவற்றில் உடனுக்குடன் வெளி யாகும் வண்ணம் ஒழுங்குகள் மேற்கொள் ளப்பட்டன. இதன்வழியே - தமிழ் நெற் தடை செய்யப்பட்டிருந்த இலங்கை தலைநகர் கொழும்பிலேயே, தமிழ் நெற் செய்திகளை வேறு இணைய தளத்தின் மூலம் உடனுக்குடன் அறிந்து கொள்ள முடிந்தது.

இதேவேளை - இலங்கை அரசாங்கத் தின் இணையத்தளங்கள் தவிர, அரசு ஆதரவாளர்களாலும் வேறுபல அமைப்புக் களாலும் நடத்தப்படும் இணையத்தளங் களில் காணப்படும், 'ஒரே நாடு, சிங்கள மயப்பட்ட அல்லது பெரும்பான்மை நிலைப்பாடு' என்ற கருத்தியல் போலல் லாது, புலம்பெயர் தமிழர்களின் இணையத் தளங்கள் - விஞ்ஞானப்பூர்வமான, வர லாற்று ரீதியான ஆதாரங்களை முன் வைப்பதுடன், இனச் சார்புத் தன்மையுட னான மொழிப் பிரயோகங்களை (Racial Language) பெருமளவில் தவிர்த்துக் கொள்வது மேற்குலகின் அபிமானத்தைப் பெற்றிருக்கிறது.[9]

சாதாரணமாக, அதிகார மையங்கள் கட்டுப்படுத்தும் வெகுசன ஊடகங்களி லிருந்து, இணையம் - ஒடுக்கப்பட்ட மக்கள் குரலுக்கும் இடமளிப்பதைப் புலம்பெயர் தமிழர்கள் தொடர்ந்து நிரூபித்து வருகின் றனர். இவ்வாறு புலம்பெயர் தமிழர்கள் தமது அரசியல் அடையாளத்தை, ஊடகங் கள் வழி முன்னெடுப்பதில் ஒழுங்குமுறை யும் தீவிரமும் காட்டி வருகின்றனர்.

**குறிப்புகள்**


1. Dhananjayan Sriskandarajah, 'Tamil Diaspora Politics', www.tamilnation.org/Diaspora/060209sriskandarajah.pdf.
2. Maxwell keegal, 'An assessment of the role of the Sri Lankan Diaspora', Daily News, 30-01-2007.
3. மேலது
4. Sivaram D., 'Video images - the strategic dimension', Daily Mirror (Sri Lanka), 30-03-2005.
5. மேலது
6. Tamilnaatham.org
7. Sreetharan. M. (USA), "Tamil Diaspora and Sri Lanka's Disinformation', Tamilnation.org, 01-10-2000.
8. மேலது.
9. மேலது.


* * *